WOMEN'S COLLEGE HOSPITAL
Health care for women | REVOLUTIONIZED

# ஊடக வெளியீடு

## முதன்-முதலாக கனடா ஆராய்ச்சி ஒன்று பெண்கள் தங்கள் உடல்நலப் பராமரிப்பு அனுபவத்தில் இருந்து எதை விரும்புகிறார்கள் என்பதைக் கண்டறிந்தது

*மகளிர் கல்லூரி, பதிலுக்கு அதிநவீன வசதிகள் நிறைந்த புதிய மையத்தை உருவாக்கி, பெண்கள் உடல்நலத்தைக் குறியாகக் கொண்ட ஒன்டாரியோவின் ஒரே புறசிகிச்சை மருத்துவமனையாகத் திகழ்கிறது.*

டோரண்டோ, ஒன்டாரியோ செப்டம்பர் 28, 2010 - பெண்களின் தனித்துவமான உடல்நலப் பராமரிப்பு தேவைகள் மற்றும் உயர் முன்னுரிமைகளைப் பூர்த்தி செய்வதைக் குறியாகக் கொண்ட, ஒன்டாரியோவின் ஒரே புறசிகிச்சை மருத்துவமனையை, மகளிர் கல்லூரி மருத்துவமனை கட்டுகிறது என்ற அறிவிப்பை, மகளிர் கல்லூரி மருத்துவமனை, சுகாதாரம் மற்றும் நீண்டகாலப் பராமரிப்பு துறை அமைச்சர் மாண்புமிகு டெப் மாத்யூஸ் அவர்களுடனும், ஒன்டாரியோவின் பன்முக சமூகங்களின் பிரதிநிதிகளாக உள்ள பெண்களுடனும் இணைந்து இன்று அறிவித்துள்ளது.

புதிய கட்டடத்தை அறிவிப்பதன் மூலம், மகளிர் கல்லூரி மருத்துவமனை, தான் நடத்திய ஆராய்ச்சிகளுக்குப் பதில் தரும் வகையில் செயல்படுகிறது. "*மகளிர் உடல்நலத்துக்கு ஓராயிரம் குரல்கள்*"என்ற அறிக்கையில் இந்த ஆராய்ச்சி விவரங்கள் இருக்கின்றன. ஒன்டாரியோ மாகாணத்தைச் சேர்ந்த பெண்கள் தங்களுடைய உடல்நலப் பராமரிப்பு அனுபவத்தில் இருந்து எதை விரும்புகிறார்கள் என்பதை இந்த ஆராய்ச்சி கவனித்துள்ளது. (வாழ்வின் எல்லாத் தரப்புகளிலும் வாழும் பெண்களிடமும்,

ஒன்டாரியோ பெண்களிடமும், நிறைய கேள்விகள் மூலமாக தகவல் சேகரித்த, 1,000 நேர்காணல்களைக் கொண்ட) இந்த ஆய்வானது, உடலில் தோன்றும் அறிகுறிகளைக் கண்டறிவதையும் தாண்டி குணம் தரும் ஓர் இடத்தைக் காண பெண்கள் விரும்புகிறார்கள் என்பதைக் காட்டுகிறது. அவர்கள், மருத்துவமனையில் உள்நோயாளியாகச் சேராமல், வீட்டில் இயல்பாக வாழும் சூழ்நிலையில், தங்களது நிலையைச் சமாளித்துக் கொள்ளவும், நோய்களைத் தடுக்கவும் உதவியை விரும்புகிறார்கள் என்றும் இது தெரிவிக்கிறது.

"இன்றைய நிகழ்ச்சியானது இந்த மாகாணத்தில் பெண்களின் உடல்நலப் பராமரிப்பு தேவைகளைப் பூர்த்தி செய்வதில் நமது அரசின் நோக்கத்தை நிறைவேற்றுவதில் ஒரு ஆக்கபூர்வ படி முன்னேற்றமானதாக உள்ளது," என்று ஒன்டாரியோவின் சுகாதாரம் மற்றும் நீண்டகாலப் பராமரிப்பு துறை அமைச்சர் மாண்புமிகு டெப் மாத்யூஸ் கூறினார். "புறசிகிச்சை பராமரிப்பு மையமாக புதிய பங்கை ஆற்றுவதற்கு மகளிர் கல்லூரி மருத்துவமனை முன்வந்திருப்பதையும், உடல்நலப் பராமரிப்பு, கல்வி மற்றும் ஆராய்ச்சியில் மாகாணத்தில் முன்னோடியாக இருக்க முன்வந்திருப்பதும் எனக்கு சிலிர்ப்பை உருவாக்கியுள்ளது."

மகளிர் கல்லூரி மருத்துவமனையானது, புறசிகிச்சை மருத்துவமனையுடன் மகளிர் உடல்நலனில் முன்னேற்றம் காண்கிறது. நீரிழிவு, புற்றுநோய், இருதய நோய், மூட்டு வலி, எலும்பு வலுவிழப்பு, தலைவலி மற்றும் மன நோய் - போன்ற சிக்கலான வரிசையில் உள்ள நோய்களுடன் வாழும் எல்லா வயதினரிலும் உள்ள பெண்கள் - உடல்நலத்துடனும், அதிக சுதந்திரமாகவும் வாழ இது சக்தியைத் தரும். மருத்துவமனையில் தங்கியிருக்கும் அவசியம் இல்லாமல், ஆக்கபூர்வமாக மற்றும் பாதுகாப்பான முறையில், அவர்களது வயது, இனம், திறன், மதம், பாலியல் விருப்பம் அல்லது வாழ்க்கைச் சூழல் போன்ற தனிப்பட்ட தேவைகளுக்கு மதிப்பு அளிக்கும் வகையில் பராமரிப்பு வசதியை இது தரும்.

*மகளிர் உடல்நலத்துக்கு ஓராயிரம் குரல்கள்*

மகளிர் கல்லூரி மருத்துவமனையின் *மகளிர் உடல்நலத்துக்கு ஓராயிரம் குரல்கள் அறிக்கையின்படி* தங்களுக்குக் கிடைக்கும் பராமரிப்பு வசதிகளில் பெண்களுக்கு மனநிறைவு இல்லை, பெரும்பாலும் அதிருப்தி அடைகிறார்கள் என்று தெரிய வந்துள்ளது. உண்மையில், தாங்கள் ஒரு தனிநபராக நடத்தப்படாமல், ஒரு எண்ணாகவே நடத்தப்படுவதாக 65 சதவீதம் பெண்கள் கூறியுள்ளனர். தங்களின் வாழ்வு சூழ்நிலைகள் மற்றும் தேவைகள் பற்றி தாங்கள் கூறுவதைச் செவிமடுப்பதற்கு பதிலாக, முடிந்தவரை சீக்கிரத்தில் தங்களை அனுப்பி வைப்பதிலேயே குறியாக இருப்பதாக 70 சதவீதம் பேர் கூறியுள்ளனர். உடலின் பாகங்களுக்கு மட்டும் என்றில்லாமல், ஒட்டுமொத்த உடலுக்கும் சிகிச்சை தரக்கூடிய முழுமையான உடல்நல அணுகுமுறை என்பது உடல்நலத்தைப் பேணும் மையங்களுக்கு முக்கியமானது என்று எண்பது சதவீதம் பெண்கள் கூறியுள்ளனர். ஆனால் மருத்துவமனைகளும், உடல்நலப் பராமரிப்பு நிலையங்களும்

தங்கள் பணியை வெற்றிகரமாகச் செய்வதாக 43 சதவீதம் பேர் மட்டுமே கூறியுள்ளனர்

இன்னும் கூடுதலாக, மருத்துவமனையில் சேர்ப்பதைவிட தங்களுக்கு புறநோயாளியாகவே சிகிச்சை தர வேண்டும் என்று 90 சதவீதம் பேர் விருப்பம் தெரிவித்துள்ளனர். சிக்கலான சூழ்நிலைகளில் மேற்கொள்ளப்படும் சிகிச்சைகளில் தங்கள் வாழ்வை இழப்பதற்கு அவர்கள் விரும்பவில்லை. மேலும் ஆய்வில் பங்கேற்ற பெண்களில் 80 சதவீதம் பேர், மாறுபட்ட கலாசாரங்களைச் சேர்ந்த பெண்களின் உணர்வுகள் பற்றி அந்த நிறுவனத்துக்கு தெரிந்திருக்க வேண்டும் என்றும், இந்த உணர்வுகளுக்கு ஏற்பச் செயல்படும் செயல்முறைகள் உள்ள நிறுவனமாக இருக்க வேண்டும் என்றும் கூறியுள்ளனர்.

“100 ஆண்டுகளுக்குப் பிறகு, மகளிர் கல்லூரி மருத்துவமனையானது, பெண்களின் உடல்நலப் பராமரிப்பில் தொடர்ந்து முன் வரிசையில் நிற்கிறது” என்று மகளிர் கல்லூரி மருத்துவமனையின் தலைமைச் செயல் அதிகாரியும், தலைவருமான மார்லின் எமெரி கூறினார். “இரண்டு ஆண்டுகளாக தயாரிக்கப்பட்ட மகளிர் உடல்நலத்துக்கு ஓராயிரம் குரல்கள் அறிக்கையானது, நமது அதிநவீன வசதியுள்ள புதிய மையத்தின் உருவாக்கத்தை வெளிப்படுத்துவதோடு நமது சேவையளிப்பு மற்றும் பராமரிப்பில் நேரடி விளைவை ஏற்படுத்தும். மகளிர் கல்லூரி மருத்துவமனை ஏற்கெனவே அளித்து வரும் வகையிலான பராமரிப்புக்கு பெண்கள் தயாராக உள்ளனர் மற்றும் அதை விரும்புகின்றனர் என்பதை இந்த அறிக்கை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.”

**மகளிர் கல்லூரி மருத்துவமனையின் புதிய மையம்**

மகளிர் கல்லூரி மருத்துவமனையின் புதிய மையத்தை, 2015-ல் கட்டி முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. சிறப்பான அறுவைசிகிச்சை அறைகள் மற்றும் மருத்துவ அறைகளுடன் இது கட்டப்படும். இந்த "அருகாமை மருத்துவ நிலையங்கள்'' நோயாளிகள் மற்றும் அலுவலர்கள் ஆகியோருக்கு வரவேற்பு தரும் வகையில் ஆதரவான இடமாக அமையும், மேலும் மருத்துவப் பராமரிப்பு, ஆராய்ச்சி மற்றும் கல்வி ஆகியவை ஒன்றிணைந்ததாக இருக்கும்.

"நான் முதலில் மகளிர் கல்லூரியில் நான்கு ஆண்டுகளுக்கு முன்பு நுழைந்தபோது அச்சப்பட்டேன்'' என்கிறார் மகளிர் கல்லூரி மருத்துவமனையின் போட்டோதெரபி கல்வி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் (PERC) உள்ள க்யுடேனியஸ் டி செல் புற்றுநோய் நோயாளியான பார்பரா டாபுனோ. "ஆனால், என் அச்சத்தைத் தூக்கிப் போட வைப்பதற்கு, செவிலியருக்கும், டாக்டர்களுக்கும் அதிக கால அவகாசம் தேவைப்படவில்லை. முதலில் நான் பரிசோதனைக்கு நேரம் வாங்கியதில் இருந்து, மரியாதையாக, பாதுகாப்பாக, சௌகரியமாக உணருமாறு கவனிக்கப்பட்டேன் உடல்நலப் பராமரிப்பு அலுவலர்கள் பணி நேரத்தைத் தாண்டியும் சேவை செய்து, நான் வலுவான நபராக ஆவதற்கு உதவி செய்தார்கள்."

இன்று புதிய மையத்தின் அறிவிப்பை வெளியிடுவதில் சுகாதாரம் மற்றும் நீண்டகாலப் பராமரிப்பு துறை அமைச்சர் மாண்புமிகு மார்லின் எமெரி மற்றும் பார்பரா டாபுனோவுடன் ஏராளமான சமுதாய அமைப்புகளும் சேர்ந்து கொண்டுள்ளன. இந்தக் குழுக்களில்: சிஸ்டாரிங், கே மற்றும் லெஸ்பியன்கள் சமத்துவ அமைப்பு, கனடாவின் ஆகா கான் கவுன்சில், மகளிர் உடல்நலம் மகளிர் கையில் என்ற அமைப்பு, இந்திய நட்புணர்வு மையங்களுக்கான ஒன்டாரியோ கூட்டமைப்பு, நெல்லிஸ் ஷெல்ட்டர் மற்றும் பிறவும் அடங்கும். சொல்லப்போனால், மகளிர்

உடல்நலத்துக்கு ஓராயிரம் குரல்கள் ஆராய்ச்சித் திட்டத்தைத் தயாரிப்பதில், மகளிர் கல்லூரி மருத்துவமனை பன்முகத்தன்மை உள்ள 60 மகளிர் குழுக்களுடன் பேசியது. அவர்களுடைய வெவ்வேறான தேவைகளை அறிந்திடவும், ஒரு மருத்துவமனையில் ஒவ்வொரு சமூகத்துப் பெண்களும் எதை எதிர்பார்க்கிறார்கள் என்பதை உறுதி செய்யவும் இவ்வளவு குழுக்களுடன் பேசியது.

**மகளிர் கல்லூரி மருத்துவமனை பற்றி**

கடந்த 100 ஆண்டுகளாக, மகளிர் கல்லூரி மருத்துவமனை மகளிர் உடல்நலத்தில் சாதனையான முன்னேற்றங்களுக்காக அர்ப்பணித்துக் கொண்டு செயல்படுகிறது. Pap சோதனையைக் கண்டறிவதில் மகளிர் கல்லூரி மருத்துவமனை கூட்டாகச் சேர்ந்து செயல்பட்டது, ஒன்டாரியோவின் முதலாவது வட்டார பாலியல் தாக்குதல் பராமரிப்பு மையத்தைத் திறந்தது, இந்த மாகாணத்தில் முதன்முதலில் மார்பக ஊடுகதிர் வசதி (மேமோகிராபி) பயன்படுத்தியது.  இன்று மகளிர் கல்லூரி மருத்துவமனையானது ஒன்டாரியோவின் முதலாவது மற்றும் ஒரே புறசிகிச்சை பராமரிப்பு மையமாக உள்ளது. மேலும், பெண்கள் உடல்நலத்திற்கான அதிநவீன பேணுதல் வசதி, ஆராய்ச்சி மற்றும் கல்வியில் கவனம் செலுத்துகின்ற, டோரண்டோ பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட, கற்பிக்கும் மருத்துவமனையாக உள்ளது.  மகளிர் உடல்நலம் மற்றும் புறசிகிச்சை கவனிப்பில் புதுமைகளைப் புகுத்துதல் மற்றும் மகளிர் உடல்நலத்துக்காக அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் ஒரே கனடா நாட்டு மருத்துவமனையாக மகளிர் கல்லூரி ஆராய்ச்சி நிலையம் உள்ளது.

மகளிர் கல்லூரி மருத்துவமனை அல்லது ஆராய்ச்சி நிலையம் பற்றி மேலும் கூடுதல் தகவல்களுக்கு, காணுங்கள் www.womenscollegehospital.ca.

மகளிர் *உடல்நலத்துக்கு ஓராயிரம் குரல்கள் அறிக்கை* பற்றி
2009 ஜூன் மற்றும் செப்டம்பர் மாதங்களுக்கு இடையில் ஒன்டாரியோ-வில் 1000 பெண்களை அணுகி, அவர்களின் உடல்நலம் மற்றும் உடல்நலப் பராமரிப்பில் பெண்களின் உறவுகள் குறித்த உள்ளார்ந்த கருத்துகளைக் கூறுமாறு கேட்கப்பட்டது. தகவல்கள் 25 நேரடி சமூக அமைப்புகள் மற்றும் 35 ஆன்லைன் சமூக அமைப்புகள் மூலம் சேகரிக்கப்பட்டன.

இதுமட்டுமின்றி, 2010 ஏப்ரல் 20 மற்றும் ஏப்ரல் 28-க்கு இடையில் ஒன்டாரியோவில் 18 வயதுக்கு மேற்பட்ட 584 பெண்களிடம் லெகர் மார்க்கெட்டிங் அமைப்பு சர்வே நடத்தியது. மருத்துவமனைகள் மற்றும் உடல்நலப்பராமரிப்பு வசதி அளிப்பவர்கள் பற்றி தங்களது அனுபவங்கள் குறித்து நல்ல புரிதலை மகளிர் கல்லூரி மருத்துவமனைக்கு வழங்க இந்த சர்வே நடத்தப்பட்டது. ஒரே அளவிலான நிகழ்தகவு மாதிரியுடன் நடத்தும் ஆய்வில் +\-4.1% எ ன்ற அளவில் முடிவுகள் இருக்கும், 20 தடவைகளில் 19 தடவைகள் என்று இருக்கும்.

மகளிர் உடல்நலத்துக்கு *ஓராயிரம் குரல்கள் அறிக்கையின் முழு முடிவுகளைப் பின்வரும்* தொடர்பில் காணலாம் www.womenshealthmatters.ca/1000women.

மகளிர் கல்லூரி மருத்துவமனையின் பிரசாரத்துக்கு ஆதரவு காட்டுங்கள். கூடுதல் தொடர்புகள் அறிய ஜோஆன் கோல், தலைவர் & தலைமைச் செயல் அதிகாரி, மகளிர் கல்லூரி மருத்துவமனை அறக்கட்டளை. 416-813-4738

– 30 –

**மேலும் கூடுதல் தகவலுக்கு, தயவுசெய்து தொடர்பு கொள்ளுங்கள்:**

Rebecca Beitchman
Environics Communications

Jodi Salem
Women's College Hospital

(416) 969-2744
rbeitchman@environicspr.com

(416) 323-6400 x 4054
Jodi.Salem@wchospital.ca